மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவிடைமருதூர்

**முன்னிலை: திரு. நா.சிவபழனி, B.A.,B.L,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 114 ஆம் நாள் வியாழன் கிழமை

**அசல் வழக்கு எண். 114/2023**

-----

ராயர் ... வாதி

/ எதிராக /

1, ரவிச்சந்திரன்

2. ராஜேந்திரன்

3. அறங்காவலர்,

அண்ணாமலை பல்கலைக்கழகம்,

சிதம்பரம். ..பிரதிவாதிகள்

இத்தாவாவானது இந்நீதிமன்றத்தால் கடந்த 19/09/2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.லோகநாதன்**,B.SC.,B.,L., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.V.M.தமிழ்செல்வன்**,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், வாதி தரப்பில் போதுமான கால அவகசாம் கொடுத்தும், தகுந்த வாய்ப்பு கொடுத்தும், மேல் நடவடிக்கை எடுக்கப்படாததால் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## தீர்ப்புரை

வாதியின் அமைதியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வரும் தாவா சொத்தில் 1, 2 பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ அல்லது 1, 2 பிரதிவாதிகள் மூலம் உரிமை கோரும் வேறு எந்த நபர்களோ எந்த வகையிலும், சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமித்தோ அல்லது வேறு வகையிலோ எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத் தொகைக்காவும் இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதி அழைத்தும் ஆஜரில்லை. வாதி தரப்பில் எடுத்துரைக்கப்படவில்லை. வாதி தரப்பில் போதுமான கால அவகாசமும், தகுந்த வாய்ப்பும் வழங்கப்பட்டும் வாதி தரப்பில் வழக்கை நடத்த மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே இவ்வழக்கானது வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

2024-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 05-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

**ஒப்பம் (நா. சிவபழனி),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**